பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6=00

அன்பளிப்பு

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 மாசி 2 புதன்கிழமை (14-02-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 80

## வெல்லம்பிட்டிப் பகுதியில் பரசூட் ஒன்று கண்டுபிடிப்பு

### இந்திய தயாரிப்பாம்

கொழும்பு, பெப். 14

கொழும்பு வெல்லம்பிட்டிப் பகுதியில் உள்ள கரவில என்றும் இடத்தில் இருந்து பொலீஸார் இந்திய தயாரிப்பு 'பரசூட்' ஒன்றை கண்டெடுத்துள்ளனர்.

அப்பகுதி மக்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்தே பரசூட் கண்டுபிடிக்கப்பட்டது.

பரசூட் எப்படி இங்கு வந்திருக்கலாம் என்பது குறித்து விசாரணை நடப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இச்சம்வத்தை அடுத்து இப்பகுதியில் பதற்றம நிலவியது. (இ-3)

## புலிகளின் தாக்குதலில் சாம்பல்தீவில் 4 பொலீஸார் 1 சிப்பாய் பலியாகினர்

கொழும்பு, பெப். 14

திருகோணமலை மாவட்டம், சாம்பல் தீவில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் வீதித்தடை முகாமில் நடந்த மோதல் ஒன்றில் 4 பொலீஸாரும், ஒரு சிப்பாயும் கொல்லப்பட்டனர் என பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

மேலதிக படையினர் அந்தப்பகுதிக்கு அனுப்பப்பட்டதாகவும் —

இம்மோதலில் ஒரு இராணுவ சிப்பாய் காயமடைந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதலில் சிக்கி மூன்று பொதுமக்களும்கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-3]

## குமரபுரத்தில் படையினர் வெறியாட்டம்

# 24 தமிழர்களின் சடலங்கள் மீட்பு!

# கைதான 40பேர் கதி தெரியவில்லை!

### கர்ப்பிணிக்கு நேர்ந்த கதி

குமரபுரத்தில் கடந்த ஞாயிறு இரவு படையினர் நடத்திய வெறியாட்டத்தின் போது தமிழ்க் கர்ப்பிணிப் பெண் ஒருவரையும் அவர்கள் கொடூரமாக வெட்டிக் கொன்றுள்ளனர்.

வெட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்த ந்தத் தாயின் வயிற்றுக்கு வெளியே குழந்தை இறந்து கிடந்தது. குழந்தையின் உடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது. (உ-3)

### காவலரண் அழிப்பு

மட்டக்களப்பு மாவட்டம் ஒட்டமாவடியில் பாலத்தில் அமைக்கப்பட்டடிருந்த சோதனை சாவடி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் இரவு 12.20 மணியளவில் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படுகாயமுற்ற 30 பேர் வைத்தியசாலையில்

சாவகச்சேரி, பெப்ரவரி 14

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தில் கிளிவெட்டிப் பகுதியில் உள்ள குமரபுரம் தமிழ்க் கிராமத்தில் ஞாயிறு இரவு ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய வெறியாட்டத்தில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழர்களில் 24 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டிருக்கின்றன; இச்சம்பவத்தில் படுகாயமடைந்த 30 பேர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

படையினர் வெறியாட்டம் புரித்த சமயம் அவர்களால் பிடித்துச் செல்லப்பட்ட பத்து இளம் பெண்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் உட்பட 40 பேரின் கதி என்னவென்பது. இதுவரை தெரியவரவில்லை.

உயிரிழந்தவர்களில் எட்டு பெண்கள், ஒன்பது சிறுவர்கள், ஏழு ஆண்கள் என மொத்தம 24 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

காயமடைந்தோர் திருகோணமலை மற்றும் சேரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கைது செய்யப்பட்டவர்களில் பத்து பேர் இளம் பெண்கள்

குமபுரத்தில் வெறியாட்டம் நடத்திய படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட நாற்பது தமிழர்களில் பத்துப் பேர் இளம்பெண்களாவர்.

குமரபுரத்தில் வெறியாட்டம் நடத்த வந்த படையினர் அங்கு பயத்தில் வீடுகளுக்குள் ஒளித்திருந்த பத்து இளம் பெண்களையே பிடித்துச் சென்றிருக்கின்றார்கள்.

அதே சமயம் ஞாயிறு இரவிரவாக படையினர் நடத்தும் வெறியாட்டத்தை அறிந்து கொள்ளாமல் திங்கட்கிழமை அதிகாலை மூதூரிலிருந்து வாகனத்தில் குமரபுரம் ஊடாகச் செல்லவந்த சுமார் முப்பது பேரும் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஆண்கள், பெண்கள் மற்றும் அரச ஊழியர்களும் அடங்கியிருந்தனர்.

படையினர் வெறியாட்டத்தில் காயமடைந்த நிலையில் அப்பகுதியில் கிடந்த சிலர், இவர்களைப் படையினர் பிடித்துச் சென்றதைக் கண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிடித்துச் செல்லப்பட்டோர் எங்கு கொண்டு செல்லப்பட்டனர்? அவர்களுக்கு நேர்ந்த கதி என்ன? என்பன குறித்து இதுவரை தகவல் ஏதும் வெளியாகவில்லை.

சில மணி நேரம் அப் பகுதியை போக்குவரத்துக்கு படையினர் மூடியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-3]

குமரபுரம் படுகொலைகள்

## வெடிகுண்டுத் தாக்குதலை நியாயப்படுத்தியுள்ளது!

### ஈ.பி.ஆர்.எல்.எவ். கருத்து

கொழும்பு, பெப். 14

குமரபுரத்தில் அதிகாலை வேளை ஊருக்குள் நுழைந்து வீட்டுக் கதவுகளையும், ஜன்னல்களையும் உடைத்து நிராயுதபாணிகளாக நின்ற அப்பாவித் தமிழ்மக்களை படையினர் சுட்டுப் பொசுக்கிய செயல் கொழும்பில் நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலை நியாயப்படுத்தி உள்ளது.

ஈ. பி. ஆர். எல். எவ் பேச்சாளர் ஒருவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

இதற்கிடையில்— குமரபுரத்தில் நடந்த படுகொலை தொடர்பாக உடன் நடவடிக்கை மேற்கொள்ளும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. டி. பி, ஈ. பி. ஆர். எல். எவ்., புளொட் ஆகிய நான்கு தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியை வற்புறுத்தியுள்ளன. (உ-3-7)

### சிறைக்காவலர் கைதிகள் கடத்தப்பட்டனர்

கடந்த ஞாயிறு காலை மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கு சென்று கொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்றை வழிமறித்த இனம் தெரியாத சிலர் அதில் பயணம் செய்த இரு சிறைக் காவலர்களையும், இரு விடுதலைப்புலிச் சந்தேகநபர்களையும் கடத்திச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப் படுகின்றன. (இ-3)

## திருமலை நகரசபை உறுப்பினரும் மற்றும் இருவரும் சுட்டுக் கொலை!

### குமரபுரம் சென்ற வழியில் சம்பவம்

கொழும்பு, பெப். 14

திருகோணமலை நகரசபை உறுப்பினர் ஒருவர் உட்பட மூவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குமரபுரத்தில் படுகொலைகள் இடம்பெற்ற இடத்தைப் பார்வையிடுவதற்காக வாகனம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த சமயம் இவர்களது வாகனம் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சுட்டுக் கொல்லப்பட்ட நகரசபை உறுப்பினரின் பெயர் விவரம் அறிவிக்கப்படவில்லை. [இ-6[

## அரசையும் புலிகளையும் பேச்சுக்கு இணங்க வைக்க நோர்வே முயற்சி

### இம்மாதம் இறுதியில் கலந்துரையாடல்

ஒஸ்லோ, பெப். 14

ஸ்ரீலங்கா அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இணங்க வைக்கும் முயற்சியில் —

இரு தரப்பின ... நெருங்கிய தொடர்புடைய பிரதிநிதிகள் பங்குபற்றும் கலந்துரையாடல் ஒன்று — இம்மாத இறுதியில் ...

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவிப்பு

இல, 258, கண்டிவீதி, சாவகச்சேரியில் கடைக் கட்டடம் எனக்கு சொந்தமானது. அக் கட்டடம் மந்துவில், கொடிகாமம் சின்னையா, சந்தசாமிக்கு 19/01/1993 ம் திகதி தொடக்கம் மூன்று வருடத்திற்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டது. குறித்த கால எல்லை 19/12/1995 ந் திகதியுடன் காலாவதி ஆகிவிட்டது.

எனவே இக்கட்டடம் தொடர்பாக குறித்த சின்னையா கந்தசாமியுடன் தொடர்பு கொள்ளாது என்னுடன் தொடர்பு கொள்ளுமாறு இத்தால் தெரியப் படுத்துகின்றேன்.

வ. கிருஸ்ணசாமி
மீனாட்சி அம்மன் கோவில் வீதி,
சங்கத்தானை.

(40633)

## அறிவித்தல்

### தென் இந்தியத் திருச்சபை
யாழ். ஆதீனம்

C. C. F –கனேடிய நிதிய உதவிபெறும் யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர்கல்லூரி பகல்பராமரிப்பு நிலைய அனைத்துப் பிள்ளைகளும் தங்களது சுய விவரங்களுடன் நமது ஆதீன காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்

ஆதீனக் காரியாலயம்
புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி.

(சி/4032)

## யாழ்ப்பாணக் கல்லூரி
## உடுவில் மகளிர் கல்லூரி
ஆசிரியர்களுக்கான
### கூட்டமும் கலந்துரையாடலும்

மேற்படி கூட்டம் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையில் **17-2-96** காலை 9.00 மணிக்கு நடைபெறும். இரு கல்லூரி ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டடப்படுகின்றனர்.

நிகழ்ச்சி நிரல்

1) ஞான ஒழுக்கம்:
பேராயர்- எஸ். ஜெபநேசன்
2) ஆசிரியர் கூட்டமும் கலந்துரையாடலும்
3) மதியபோசனம்

(40752)

-நிர்வாகம்

## பூநகரியில் நிவாரணம்

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள நலன்புரி நிலையங்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்கி இருப்போருக்கு உடுபுடைவைகள், பாத்திரங்கள், பால்மா போன்ற பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பூநகரி பிரதேச செயலர் திரு. இரா. இரவீந்திரன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

இந்த நிவாரணப் பொருள் விநியோகத்தில் நலன்புரி நிலைய உத்தியோகத்தர்கள் கிராம சேவைஉத்தியோகத்தர்கள், பணிமனை உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்கள். (இ-133)

## மறை ஆசிரியருக்கு விண்ணப்பம்

அரசாங்க பாடசாலைகளில் மறை ஆசிரியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை தேசிய கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

ஜி. சீ. ஈ. (உயர் தர) பரீட்சையில் சித்தியடைந்தவர்களும், பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக பணிபுரியும் மறை ஆசிரியர்களும், தேசிய மறை ஆசிரியர் தேர்வு 1, 2, 3 சித்தியடைந்தவர்களும், துறவிகளும் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என்றும்—

விண்ணப்பங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய கல்வி இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும் என்றும்— தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிப் பரீட்சைகள் அடுத்த மாதம் 2ஆம் திகதி கொழும்பில் நடைபெறும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை பங்கு தந்தையர்களிடமும், மறை மாவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருட்திரு. சகாயநாயகத்திடமும் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
## பொதுச்சபை உறுப்பினர்களுக்கான
# அறிவித்தல்

தாங்கள் அங்கத்துவம் வகித்த தாய்ச்சங்கத்தின் பொதுக் கூட்டத்தை கீழ் வரும் திகதிகளில் நடத்துவதற்கு 06 - 02 – 96 ஆம் திகதிய வாராந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் குறித்த முகவரியில் உள்ள தங்கள் தாய்ச் சங்கத்தின் செயலாளருக்கு ஏதாவது பிரேரணைகள் அனுப்ப விரும்பின் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ள திகதியிலிருந்து பதின்நான்கு நாள்களுக்கு முன்பாக அறியக் கொடுத்து உதவவும்.

| சங்கம் | முகவரி | பொதுக்கூட்ட திகதி |
|---|---|---|
| 01. பளை | பச்சிலைப்பள்ளி, பளை. | 01-03-1996 |
| 02 மானிப்பாய் | பழைய வடிசாலைக் களஞ்சியம், 1ஆம் ஒழுங்கை, கொடிகாமம. | 03-03-1996 |
| 03. அரியாலை | கண்டி வீதி, மீசாலை. | 04-03-1996 |
| 04. கோண்டாவில் | புதிய புகையிரத நிலையம் முன்பாக, மீசாலை. | 05-03-1996 |
| 05. அச்சுவேலி | சாவகச்சேரி ப. தெ. வ. அ. கூ. சங்க அலுவலகம். | 07-03-1996 |
| 06. சங்கானை | பழைய வடிசாலைக் களஞ்சியம், சச்சாய் வீதி, 1ஆம் ஒழுங்கை, கொடிகாமம். | 09-03-1996 |
| 07. யாழ்ப்பாணம் | ஜெயபாலன் வீதி, கல்வயல். | 10-03-1996 |
| 08. சுன்னாகம் | அரசினர் தமிழ் கலவன் பாடசாலை முன்பாக, கொடிகாமம். | 12-03-1996 |
| 09. தெல்லிப்பழை | பனை வெல்ல தொழிற்சாலை, மீசாலை வடக்கு, கொடிகாமம். | 14-03-1996 |
| 10. கரவெட்டி | மாலி சந்தி கரவெட்டி. | 15-03-1996 |
| 11. பண்டத்தரிப்பு | கொடிகாமம் ப. தெ. வ. அ. கூ. சங்கம், கொடிகாமம். | 16-03-1996 |
| 12. கோப்பாய் | முத்தெட்டு, வரணி. | 18-03-1996 |
| 13. கொடிகாமம் | கச்சாய் வீதி, கொடிகாமம். | 20-03-1996 |
| 14. சாவகச்சேரி | டச்சு வீதி, சாவகச்சேரி. | 21-03-1996 |
| 15. பருத்தித்துறை | மந்திகை, பருத்தித்துறை. | 23-03-1996 |

தலைவர்,
வ. டமாகாண ப. தெ. வ அ. கூ. ச. சாமசம்.

13. 02. 1996 (இ/4031)

ஆத்தியடியில்
## வீடு விற்பனைக்கு

புலோலி மேற்கு, ஆத்தியடியில் நல்ல தண்ணீர் கிணற்று வசதியுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
செ. இரத்தினசோதி
(உதவிப் பதிவாளர். யாழ். ப. க. க.)
''விக்கினேஸ்வரி இல்லம்'',
ஆத்தியடி,
பருத்தித்துறை.

(40741)

## தவறிவிட்டது

கடந்த திங்கட்கிழமை கிளாலிக்கும் மணற்காட்டிற்குமிடையில் RX றேடியோ செற், யமஹா ஓர்கன், உடுப்புக்களுடன் ஒரு சூட்கேஸ் ஆகியவை தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

க- ஜீவகாந்தன்
மே/பா கமலா ஜெயானந்தராசா,
மாதனை, புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(40755)

## கண்ணீர் அஞ்சலி

அண்மையில் திடீரெனக் காலமான யாழ்ப்பாணம் மேலதிக மாவட்டப் பதிவாளர்

### அ. பொன்னம்பலம்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

காணி மேலதிக மாவட்டப் பதிவாளரும்,
அலுவலர்களும், ஊழியர்களும்.
கிளிநொச்சி

(40654)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும், ஆத்மசாந்திக் கிரியைக்கான
# அழைப்பும்

வீட்டிற்கு முத்தாக
02-04-1975



நாட்டிற்கு வித்தாக
01-01-1996

### பஞ்சாட்சரம் கபிலன்
(வீரவேங்கை அப்பன்)

திதி: 14 - 02 - 1996

அரக்கரின் அட்டகாசம்
அல்லும் பகலும் மோசமடைந்திட
எறிகணை, குண்டு வீச்சால்
எரிந்த எம் தேசம் கண்டு
புரட்சிப் புயலாய் ஆவேசங் கொண்டு
நாடுகாக்கப் புறப்பட்ட
நம் கபிலக் குட்டி நீ!
ஈழத்துக் கரிகாலன் சேனையில்
இணைந்து இள வேங்கையாய்
எதிரிமுகாம் மீது பாய்ந்தாய்
மாவீரனாய்ச் சாய்ந்தாய்
எம் வீட்டு முற்றத்தில் நித்தமும்
இதழ் விரிக்கும் மலர்களிலே
புன் சிரிப்புப் பூக்கும்
உன் வதனம் கண்டு
எம் மனதைத் தேற்றுகிறோம்
ஆத்ம சாந்தி நீ அடைக அப்பனே!

எமது இல்லத்தில் இன்று (14-02-96) நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோ. பஞ்சாட்சரம்
(சுப்பிரமணியம்)
குடும்பத்தினர்

''ஸ்ரீரங்கம்''
நக்கீரன் வீதி,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(40749)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வைத்திய நிபுணர்கள் இல்லாமல் இயங்கும் போதனா வைத்தியசாலை

## சிகிச்சைப் பிரிவுகள் பெருமளவு பாதிப்பு

வடமராட்சி, பெப். 14

யாழ். போதனா வைத்தியசாலையில் குழந்தை வைத்தியம், மனநோய், சத்திர சிகிச்சை, மகப்பேறு ஆகிய வைத்திய சிகிச்சைப் பிரிவுகளுக்கு அந்தந்தத் துறைகளில் நிபுணத்துவம் பெற்ற வைத்திய நிபுணர்கள் இல்லை

இதனால் குறிப்பிட்ட நான்கு சிகிச்சைப் பிரிவுகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் போதனா வைத்தியசாலை இயங்கிய போது இந்த நான்கு சிகிச்சைப் பிரிவுகளுக்கும் நிபுணத்துவம் பெற்ற வைத்திய நிபுணர்கள் சேவையில் இருந்தனர்.

போதனா வைத்தியசாலை மந்திகைக்கு இடம்பெயர்ந்ததை அடுத்து இந்நான்கு சிகிச்சைப் பிரிவுகளின் வைத்திய நிபுணர்கள் கடமைக்குச் சமுகமளிக்கவில்லை. இவர்கள் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இவ்வைத்திய நிபுணர்கள் இல்லாதபோதிலும், மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் உள்ள சில சிகிச்சைப் பிரிவுகளின் (மகப்பேறு, குழந்தை வைத்தியம்) வைத்திய நிபுணர்களும், யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் உதவி வைத்திய நிபுணர்களும் இணைந்து நான்கு சிகிச்சைப் பிரிவுகளையும் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் செயல்படுத்திவருகின்றனர்.

ஏனைய நோய்கள் தொடர்பான சிகிச்சைப் பிரிவுகள் யாழ். போதனா வைத்தியசாலையினால் மந்திகையில் நடத்தப்பட்டு வருகின்றன. (இ–173)

# யாழ். ஆஸ்பத்திரி பிரிவுகள் விரைவில் இயங்கமுடியுமாம்

கொழும்பு, பெப். 14

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவையும், அவசர சிகிச்சைப் பிரிவுகளையும் சில வாரங்களுக்குள் மீண்டும் இயங்கச் செய்ய முடியும் என்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த வைத்திய குழுவினர் தெரிவித்துள்ளார்கள்.

வடக்கு—கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளரும் இந்த வைத்திய குழுவுடன் யாழ்ப்பாணம் சென்றிருந்தார்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் டாக்டர் ஆனந்த சமரசேகர தகவல் தருகையில், ஆஸ்பத்திரியில் இருந்த சகல உபகரணங்களும் அகற்றப்பட்டிருப்பதாகவும்—

கட்டடங்கள் மட்டுமே அங்கு இருப்பதாகவும்—கூறினார்.

வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளும் இப்போது திருத்தப்பட்டு வருகின்றன.

வெளி நோயாளர் பிரிவை அடுத்த வாரமே திறக்க முடியும். அவசர சிகிச்சைப் பிரிவுகளை அடுத்த மாதம் திறக்க முடியும் என்றும் அவர் கூறினார். (இ-3)

# கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவர் செயல் திட்டம்

பாடசாலைக் கல்வியைப் பெறமுடியாத நிலையில் உள்ள பிள்ளைகளுக்கு எழுத்தறிவை வழங்குதல், வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் இவ்வாண்டு மார்ச் மாத முற்பகுதியளவில் சிறுவர் செயல் திட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் பாடசாலைகளில் தொடங்கப்படவுள்ளன.

பங்குபற்ற விரும்பும் சிறுவர்கள் அயலில் உள்ள பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் கேட்டுள்ளார்.

சிறுவர் செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பாடசாலைகள் விவரம் வருமாறு:-

நாச்சிக்குடா அ. த. க. பாடசாலை, கரியாலை நாகபடுவான் இல. 3, அ த. க. பாடசாலை, குமாரசாமிபுரம் அ. த. க. பாடசாலை: இராமநாதபுரம் மேற்கு அ. த. க. பாடசாலை (மாயவனூர்) ஊற்றுப்புலம் அ. த. க. பாடசாலை, கண்டாவளை ம. வி., இரணைதீவு றோ. க த. க. பாடசாலை

இ)

# எந்த ஒரு பேரினவாதத்தின் மேலாதிக்கமும் வேண்டாம்

## முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 14

வடக்கு-கிழக்கு முஸ்லிம்களுக்கு தனியாக ஓர் அலகு வேண்டும். ஏனெனில் எந்தப் பேரினவாதத்தாலும் மேலாதிக்கம் செய்யப்படுவதை முஸ்லிம்கள் விரும்பவில்லை. இதுவே முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடாகும். நாம் வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுக்காக கோரும் இந்த அரசியல் அலகு, முஸ்லிம் மாகாண சபையாகவோ அல்லது தென்கிழக்கு மாகாண சபையாகவோ இருக்கலாம்.

மேற்கண்டவாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

பெயர் நமக்கு பெரிதல்ல. ஆனால் அந்த சுயாட்சி சபை அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு, அத்துடன் மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம் மாவட்டங்களில் முஸ்லிம் பெரும்பான்மையாக வாழும் பிரதேச சபைகளையும் இணைக்கக் கூடியதாக இருக்கவேண்டும்.

இதுவே அதிகாரப்பகிர்வில் முஸ்லிம் காங்கிரஸின் எதிர்பார்ப்பாகும்— என்றும் முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. (இ-3)

# மாடு திருட்டு

குடத்தனைப் பகுதியில் இரவு நேரத்தில் மாட்டுத் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது.

இரவு நேரத்தில் தோட்டங்களிலும், வீடுகளிலும் கட்டியிருக்கும் மாடுகளைத் திருடிச் செல்வதற்கு வெளியிடங்களில் இருந்து திருடர்கள் சைக்கிளில் வருவதாகத் தெரிகின்றது.

அண்மையில் இவ்வாறு வந்தவர்களை ஊரவர்கள் துரத்திப் பிடிக்க முயன்றபோது, அவர்கள் ஓடித் தப்பிவிட்டார்களாம். (இ-144)

# நேர்முகப்பரீட்சை ஐவர் தெரிவு

சாவகச்சேரி, பெப். 14

கணக்காய்வாளர் தரம் IIக்கான நவம்பர் 94 போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களில் ஐந்து பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ரி. சுவேந்திரராசா, கே. தவசோதி, செல்வி ஏல் ஜெயகலா, ஏ. கிரிதரன் ஏ. சுகிர்தன் ஆகியோரே நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என்றும் —

அனுமதிப் பத்திரம் கிடைக்காதவர்கள் செயலக பொதுசன தொடர்பு உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு — கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

# ரியூட்டறிகளை இயங்க வைப்பது குறித்து ஆராய்வு

வலிகாமத்தில் இயங்கிய தனியார் கல்வி நிறுவனங்களை வன்னி மற்றும் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் இயங்க வைக்க ஏற்பாடுகளை மேற்கொள்வதென நேற்று முன்தினம் நடந்த தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக ஜி. சீ. ஈ. சாதாரண/உயர்தர பரீட்சைகளுக்கான வகுப்புக்கள், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் வகுப்பு மற்றும் இறுதிப் பரீட்சையை எதிர்நோக்கியுள்ள வெளிவாரிப் பட்டப்படிப்பு வகுப்புகள் போன்றவற்றை இயங்க வைக்க நடவடிக்கை எடுப்பதென முடிவாகியது.

இந்த வகுப்புக்களை நடத்த வசதியாக தனியார் கல்வி நிறுவனங்களையும், அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் விவரங்களையும் பதிவு செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்களில் போதிக்கும் ஆசிரியர்களின் சேவையை வன்னி மாவட்டத்துக்கு விஸ்தரிக்கவும் —

வலிகாமத்தில் இயங்கிய தனியார் கல்வி நிறுவனங்கள் சிலவற்றை வன்னியில் இயக்கவும் — ஆலோசிக்கப்பட்டுவருகிறது. (உ-7)

# கொழும்பு வீதிகளில் நிறுவப்பட்டுள்ள தடை முகாம்களால் பயன் இல்லை

கொழும்பு, பெப். 14

கொழும்பிலும் வெளியிடங்களிலும் அமைக்கப்பட்டிருக்கும் சோதனைச் சாவடிகள், தடைமுகாம்கள் போன்றவற்றாலும் படையினரின் தீவிர ரோந்து நடவடிக்கையினாலும் பயன் ஏதும் இல்லை; தலைநகருக்குள் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணிகள் ஊடுருவுவதையோ ஆயுதங்கள் எடுத்து வருவதையோ தடைசெய்ய முடியவில்லை.

ஆங்கில வார இதழ் ஒன்றில் இவ்வாறு கருத்து வெளியிடப்பட்டிருக்கின்றது.

கொழும்பில் தீவிரவாதிகளின் தாக்குதல் ஆரம்பித்து பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும்—

இந்தக் காலப் பகுதியில் சோதனை நிலையங்களில் அல்லது தடை முகாம்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட படையினரால் அல்லது பொலிஸாரினால் அவர்களின் சோதனைகளின்போது வெடிகுண்டோ, ஆயுதங்களோ, தொலைத் தொடர்பு கருவிகளோ— எதுவும்— கண்டுபிடிக்கப்படவில்லை என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுவதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ)

# சிங்கள இளைஞர்களைப் பலியிட்டு வெட்டவெளிகளில் சிங்களக் கொடி!

## அரசின் சாதனை இது என்கிறது வெரித்தாஸ்

மணிலா, பெப் 14

''இன்றைய அரசு தனது வரட்டுக் கௌரவத்துக்காக ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களை பலியிட்டு கட்டாந்தரையிலும், வெட்டவெளியிலும் சிங்களக் கொடியை தூக்கிப் பிடித்துள்ளது.''

வெரித்தாஸ் வானொலி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

''உண்மையின் எண்ணங்கள்'' நிகழ்ச்சியில் வெரித்தாஸ் வானொலி தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளுக்கு பலத்த இழப்பையும் பலவீனத்தையும் ஏற்படுத்தும் எதிர்பார்ப்புடன் யாழ்ப்பாணத்தை ராணுவம் கைப்பற்றியது. ஆனால் அது தான் பறித்த குழிக்குள் தானே விழுந்து பலத்த ஆளணிச் சேதங்களையும் ஆயுத, தொழில்நுட்ப இழப்புக்களையும் சந்தித்து நிற்கின்றது.

தனது வரட்டு கௌரவத்துக்காக ஆயிரக்கான சிங்கள இளைஞர்களைப் பலியிட்டு, யுத்தம் புரியும் ஸ்ரீ லங்கா அரசு கட்டாந்தரையிலும் வெட்டவெளியிலும் சிங்களக் கொடியைத் தூக்கிப் பிடித்துள்ளது

இது எங்கள் சாதனை என்று தொடர்பு சாதனங்கள் மூலம் அரசு பிரசாரம் செய்கின்றது; உலகை ஏமாற்றப் பார்க்கின்றது.

உண்மை நிலையை விளங்காத சிங்கள — பௌத்த பேரினவாதிகள் இலங்கைத் தீவு முழுவதும் தமிழர்களைச் சீண்டி, கிண்டல் செய்து, அடிமைப்படுத்த முனைகின்றனர்; முத்துமாரி அம்மன் கோவிலில் கூட சிங்கக் கொடியை ஏற்றியுள்ளனர்.

கொழும்பிலும், மலையகத்திலும் கூட தமிழர்கள் இன ரீதியாக இம்சைப்படுத்தப்படுகின்றனர்.

ஒரு புறத்தில் சமாதானம் குறித்து பேசிக்கொண்டு மறு புறத்தில் போர்ப்பிரகடனம் செய்துள்ளது அரசு.

சந்திரிகா ஒப்புக்கு சமாதானம் பற்றி பேசுகிறார்; அவரது படைகள் வெறித்தனமான இன அழிப்பு யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

இலங்கைத் தமிழர்களுக்காக தமிழகமே திரண்டெழுந்துள்ளது.

கலிங்கப் போரில் ஏற்பட்ட உயிரிழப்புகளைப் பார்த்து மனம் நொந்த அசோக மன்னன் பௌத்த மதத்தைத் தழுவினான். ஆனால் இலங்கையின் புத்த பிக்குகளோ யுத்தத்துக்கு ஆதரவாக— இராணுவத்தையும், இராணுவத் தளபாடங்களையும், ஆயுதங்களையும், இராணுவக் கொடிகளையும் பிரித் ஓதி ஆசீர்வதிக்கின்றனர்.

பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கு உண்மையில் தமது நாட்டின் ஒருமைப்பாட்டின் மீது அக்கறை இருக்குமானால் தமது சொந்த நாட்டு மக்களையே குண்டு வீசி அழிக்கலாமா?

—இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

# இடம் பெயர்ந்தோருக்கு மலசல கூடம் அமைப்பு

சாவகச்சேரி, செப். 14

இடம்பெயர்ந்த மக்களுக்கு — 30 பேருக்கு ஒன்று — என்ற அடிப்படையில் மலசல கூடம் அமைக்கும் திட்டம் ஒன்றை கெயர் இன்ரநஷனல் நடைமுறைப்படுத்த விருக்கிறது.

கெயர் இன்ரநஷனல் அமைப்பின் யாழ். மாவட்ட நிவாரணக் குழுத்தலைவர் செல்வி. கதி அற்பீல்ட் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் தங்கியுள்ள மக்கள் மலசல கூடவசதியின்றி கஸ்டப்படுவது கண்டறியப் பட்டுள்ளதாகவும் —

அவர்களுக்கு உதவும் வகையில் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டு அதுபற்றிய மதிப்பீடு செய்யப்படுவதாகவும் —

சுகாதார அலுவலகம், மற்றும் செயலகம் ஊடாக இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட விருப்பதாகவும் — அவர் தெரிவித்தார்.

இங்குள்ள தேவை குறித்து மதிப்பீடு செய்தபின் தேவையான பொருள்களை கொழும்பிலிருந்து எடுத்து வர ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (உ-3)

# குப்பையில் கொட்டப்படும் வெங்காயப்பூ

வடமராட்சிப் பகுதியில் வெங்காயப்பூ குப்பை மேடுகளில் கொட்டப்பட்டு வருகிறது.

இங்குள்ள வெங்காயத் தோட்டங்களில் பிடுங்கப்படும் வெங்காயப் பூக்களை வீதி ஓரங்கள், தோட்ட வரம்புகள், குப்பை மேடுகள் போன்ற இடங்களில் விவசாயிகள் கொட்டி வருகின்றனர். [உ-173]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கோயில் சாமான்கள், எவர்சில்வர் பாத்திரங்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். மு. பொன்னுத்துரை, "சிவபதி" மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (வேதக்கேணி கந்தசாமி கோயில் முன்பாக)

(40739)

### தவறிவிட்டது

09 - 02 - 96 கிளாலியில் குடும்ப அட்டை, இலங்கை வங்கிப் புத்தகம், அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டு எடுத்தவர்கள் கருணைகூர்ந்து தபாலில் கீழ் காணும் விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். ச. சிறிதரன், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (40650)

### இடமாற்றம்

கொக்குவிலில் இயங்கிவந்த சுகந்தன் மருந்தகம்தற்போது பெரிய அரசடி, சங்கத்தானை எனும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை அறியத் தருகின்றோம்.

(40747)

### ஆங்கிலக் கல்வி - 96

O L, A/L மாணவருக்கும், ஆண்டு 6 தொடக்கம் 10 வரை மாணவர்களுக்கும், 3 வருட பகுதிநேர ஆசிரியராகக் கடமை புரிந்த Londan Inter B Sc. பட்டதாரி ஆசிரியரினால் வீட்டுக்கு வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும். இல. 530, மே/பா உதயன்.

(49746)

### கணணி வகுப்புக்கள்

பிரத்தியேக கணணி வகுப்புக்கள் ஆரம்பம்: 10-2-96 / 14-2-96— 9-00A.m. (Basic, Pascal, C++, dBASE III + Lotus) தொடர்புகளுக்கு: K. Vignesh, Talent Institute, கோவில் சந்தை, கரவெட்டி, நெல்லியடி. (40124)

## மாணிக்கக் கல் காணாமல் போனது

கொழும்பு, பெப். 14

வவுனியா அரும்பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த நீல மாணிக்கக் கல் கடந்த 27ஆம் திகதி காணாமற் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலுள்ள சமளங்குளம் என்னும் இடத்தில் நில அகழ்வின்போது கண்டெடுக்கப்பட்ட இந்த நீல மாணிக்கக் கல் வவுனியா அரும்பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்தது. விலை மிக உயர்ந்த இந்தக் கல்லின் பெறுமதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லையாம். (உ-19)

சுன்னாகம்
பல. நோ. கூ. சங்கம்
[வ-து] சுன்னாகம்

## அறிவித்தல்

மேற்படி சங்கத்திலிருக்கும் கழிவு சீனி (Sweeping-Sugar) கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கிறது. சங்க வேலை நாள்களில் சீனியைப் பார்வையிட்டு கேள்வி விண்ணப்பத்தை 20 - 02 - 96 க்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்.
சரசாலை வடக்கு,
12-02-96 (சி/4027)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ் மாவட்டம்

வடமராட்சி, தென்மராட்சி கோட்டங்களில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகள் இயக்குநர்கள், தனிப்பட்ட வகுப்பு ஆசிரியர்கள், கல்வி நிறுவனங்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் பதிவு செய்தல் வேண்டும். கட்டணம் **15/-**

(1) பதிவு மேற்கொள்ளும் திகதிகள்

**14, 15, 16, 17 - 02 - 1996**

நேரம்:- காலை — 9-00 — 12-00
மாலை — 2-00 — 5-00

இடம்:- வடமராட்சிக் கோட்டம் — சதா பொன்ட், மாலுசந்தி, அல்வாய்

தென்மராட்சி— யூப்பிற்றார் கல்வி நிலையம் கண்டி வீதி, சங்கத்தானை.

—பொதுச் செயலாளர்—

(சி-4030)

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து)
சுன்னாகம்

## உடனடித் தேவை

மேற்படி சங்கத்திற்கு பொருள்கள் களஞ்சியப்படுத்துவதற்கு 1200 சதுர அடிக்கு குறைவில்லாத கட்டடம் சாவகச்சேரி, சங்கத்தானை, மீசாலை, மட்டுவில் அல்லது சரசாலைப் பகுதியில் தேவைப்படுகின்றது. இது ஒரு வீடாகவோ அல்லது அரிசியாலைக் கட்டடமாகவோ இருக்கலாம்.

வழங்க விரும்புவோர் சகல விவரங்களுடனும், எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறித்து, கீழ்வரும் விலாசத்தில் நேரடியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ **20—02—96**க்கு முன்னதாக தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்

சரசாலை வடக்கு.
12-02-96. (சி-4026)

ஏழாலை

## வசந்த நாகபூஷணி அம்மன் ஜெயந்தி விழா

காலம்: 16 - 02 - 1996
நேரம்: மு. பகல் 10-00

நிகழ்ச்சிகள் -

(1) விசேட பூஜை
(2) பஜனை
(3) சொற்பொழிவு
இசைஞான திலகம் வ. குமாரசுவாமி ஐயா,
த. சிவகுமாரன்
(கானரநகர், கம்பன் கழக அமைப்பாளர்)
(4) பாத பூசை
(5) அன்னதானம் ஆகியன இடம்பெறும்

அடியார்கள் ஆலய சார்பில் உதவி பெற்று வந்த ஊனமுற்றவர்கள், வயோதிபர்கள், வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்

தற்போதைய முகவரி:
மு. வினாசித்தம்பி (தம்பு),
படித்த மகளிர்திட்டம்,
மிருசுவில்.
(மிருசுவில் பாம் அருகாமை) (சி-4028)

## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: **14 — 05 — 1965**



மறைவு: **04 — 02 — 1986**

### பொன்னம்பலம் உமாபரன்

(யாழ் இந்துக்கல்லூரி முன்னாள் மாணவன்)

திதி; 14 - 02 - 1996

அன்புச் செல்வமே!

வானத்திலே நட்சத்திரங்கள் ஒளி வீசுகின்றன. அவை மறைய நேரிடினும் உமது பாசநினைவு அன்பு உள்ளங்களை விட்டு மறையப் போவதில்லை

உமது பிரிவால் துயருறும்:
அம்மா, அக்காமார், அண்ணாமார்,
மைந்துனர்கள், மருமக்கள், பெறாமகன்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

215, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(40652)

# மருந்துக்குத் தட்டுப்பாடு

தற்சமயம் எழுதுமட்டுவாள் பகுதியில் இயங்கிவரும் கோண்டாவில் கிராமிய வைத்தியசாலையில் அம்பிசிலின், பனடோல் போன்ற மருந்து வகைகளுக்குத் தட்டுப் நிலவுகிறது.

மாதம் சுமார் பத்தாயிரம் நோயாளர்கள் வரை சிகிச்சைக்காக இங்கு வருகின்றனர் என்றும் — குறிப்பிட வசதிகள் இன்மையால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் மேற்படி வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி திரு. ந சரவணமுத்து தெரிவித்தார்.

எழுதுமட்டுவாள்ஸ்ரீகணேச வித்தியாசாலையில் தற்காலிகமாக இந்த வைத்தியசாலை இயங்கி வருகின்றது.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து 1996 - 03 – 15 வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / விரிவுரையாளர் - விலங்கு விஞ்ஞானம் / விவசாய இரசாயனவியல் / விவசாய உயிரியல்.
2. தற்காலிக உதவி விரிவுரையாளர் / தற்காலிக செய்முறை காட்டுநர் - விலங்கு விஞ்ஞானம் / விவசாய இரசாயனவியல் / விவசாய உயிரியல் / பயிராக்கவியல் / விவசாயப் பொருளியல் / விவசாயப் பொறியியல்.
3. தற்காலிக போதனாசிரியர் – கணணி.

*சம்பள அளவுத்திட்டம்:*

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I:
ரூபா 12,725 — 8X325 — 15,325/-
(மாதமொன்றிற்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II:
ரூபா 10,650 — 5X325 — 12,275/-
(மாதமொன்றிற்கு)

விரிவுரையாளர்:
ரூபா 6,050 — 10X250 — 8,550/-
(மாதமொன்றிற்கு)

தற்காலிக உதவி விரிவுரையாளர்:
ரூபா 5,270/- நிலையானது
(மாதமொன்றிற்கு)

தற்காலிகச் செய்முறை காட்டுநர் / தற்காலிகப் போதனாசிரியர்:
ரூபா 4,420/- நிலையானது.
(மாதமொன்றிற்கு)

தற்காலிகப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பரீட்சைப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்களிடம் இருந்தும், இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளிடமிருந்தும் ஏற்றுக்கொள்ளப்படும்.

*மேலதிகமாக:*

(அ) 1996 – 06 - 30ஆம் திகதி வரை நிலுவையில் உள்ள வேலைகளை நிறைவேற்றும்படியாக, மேற்குறிப்பிட்ட சம்பளத்தின் 25%ற்குச் சமமான தொகை செலுத்தப்படும்.

(ஆ) எல்லாப் பட்டதாரிகளுக்கும் ஆண்டுக்கு ரூபா 10,000/- படியும் அத்துடன் ஆண்டு அடிப்படைச் சம்பளத்தின் 10%மும் புத்தகப் படியாக ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப் பணமாக வழங்கப்படும்.

1993 மே 12ஆம் திகதிய 9/93ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா 600/– செலுத்தப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரியின் விசேட தகைமைகளை / அனுபவத்தைக் கருத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் அவர் வைக்கப்படுவார்.

விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும் மக்கள் வங்கியின் யாழ். நவீன சந்தைக் கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/– செலுத்திய பின்னர் பல்கலைக்கழகத்தின் உப-அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களையும், விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் 23X10 ச. மீ. அளவுடைய, சுயமுகவரியிட்ட, ரூபா 2/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

*குறிப்பு:*

1. விண்ணப்பப் படிவங்களையும், இதர விவரங்களையும் கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாயபீடத்திலும், கொழும்பு - 13, ஆட்டுப்பட்டித் தெரு 154ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாணக் கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.
2. ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் ஒரு நபர் தான் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறான விண்ணப்பப் படிவத்தை உபயோகித்தல் வேண்டும்.

-பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
உப-அலுவலகம்,
இந்துக்கல்லூரி,
சாவகச்சேரி. (சி-2969)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தொடரும் படுகொலைகள்

மூதூர் பிரதேசத்தில் கிளிவெட்டிப்பகுதியில், குமரபுரம் என்ற தமிழ்க் கிராமத்தில் படையினர் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தி குழந்தைகள் பெண்கள் உட்பட அப்பாவிப் பொதுமக்கள் பலரைக் கொன்று குவித்துள்ளார்கள்.

எவ்வளவு பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறித்து நேற்று வரை சரியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை அதிகம் என்றும்—

பலர் கை, கால் துண்டிக்கப்பட்ட நிலையில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சந்திரிகா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்னர் இப்படியான படுகொலைகள் நடத்தப்பட்டது இது முதலாவது தடவை அல்ல.

கடந்த டிசம்பர் முற்பகுதியிலும் மட்டக்களப்பு மாவட்டம், புதுக்குடியிருப்பில் இவ்வாறான பயங்கரத் தாக்குதலில் 30க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இப்படுகொலை நடந்து மூன்று மாதங்களுக்குள் கிளிவெட்டிப்பகுதி குமரபுரத்தில் இப்போது மற்றொரு பெருவாரிப் படுகொலை (Mass Murder) நடைபெற்றிருக்கிறது.

தமிழ் மக்களிடையே இத்தகைய பெருவாரிப் படுகொலைகள் தொடரப் போகின்றன என்பதற்கான சமிக்ஞைகளே புதுக்குடியிருப்பு, குமரபுரம் சம்பவங்கள் என்பதில் சந்தேகம் இல்லை. படையினர் ஆக்கிரமிப்புப் பகுதிகளுக்குள் பொதுமக்கள் இருக்கும்வரை இப்படியான பேராபத்துக்கள் இருக்கத்தான் போகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி அரசின் 17 வருடகால ஆட்சியில் படையினரால் பொதுமக்கள் இரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் பெரும் அளவில் இடம்பெற்று வந்தன. கொக்கட்டிச்சோலை, மயிலந்தனை என்று அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களுக்கு நீண்ட பட்டியல் உண்டு.

கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்கள் விசாரணை இன்றித் தடுத்து வைக்கப்படுவது, சித்திரவதை செய்யப்படுவது போன்ற மனித உரிமை மீறல்களும் பெரும் அளவில் இடம் பெற்றன.

உலக நாடுகளும் சர்வதேச மன்னிப்புச் சபையும் இவற்றைக் கண்டிக்க ஆரம்பிக்கவே அப்போதைய அரசு மனித உரிமைகள் செயலணிக்குழுவை நியமித்து இவற்றை எல்லாம் பூசி மெழுக முற்பட்டது.

அதன் பின்னர் பதவிக்கு வந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு, சமாதான வேடம் போட்டது. ஆனால் ஐ. தே. கவின் நோக்கம் எதுவோ, அதுவே இதன் நோக்கமாகவும் இருந்தது.

பல லட்சம் மக்களை இடம்பெயர வைத்த சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கை, புதுக்குடியிருப்பு, குமரபுரம் படுகொலைகள் இதன் வேடத்தை அம்பலப்படுத்துகின்றன.

ஆகவே தமிழ் மக்கள் ஏமாந்துவிடக் கூடாது. அரசுகள் மாறினாலும் அவற்றின் நோக்கம் ஒன்றே. அதாவது இன அழிப்பு மூலம் இனப்பிரச்சினையை அணுகுவதே இவற்றின் நோக்கம்.

# பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு துறைசார்ந்தோர் ஆதரவு தேவை

## கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்

கிளிநொச்சி, பெப். 14

குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் பாடசாலைகளைத் திறப்பது என்பது மக்களின் இடம்பெயர்வை மீள ஏற்படுத்தும். எனவே முழுமையாக எல்லா இடத்திலும் பாடசாலைகளைத் திறப்பதே அலைச்சலையும் கரைச்சலையும் திர்க்கும்

பாடசாலைகளில் விரைவில் கற்றல்,கற்பித்தல் நிகழ்ச்சிகளை ஆரம்பிப்பதற்குத் துறைசார்ந்த அனைவரின் பங்களிப்பையும் வேண்டி நிற்கிறோம்.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் கூட்டம் அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற போது—

அங்கு உரையாற்றிய தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் அமைப்பானது தமிழ்த் தேசிய வளங்களின் உச்சப்பயன்பாட்டைப் பெறுவதையே முழுநோக்காகக் கொண்டுள்ளது. குறிப்பாக எமது தேசியத் தலைவர் போர்ச் சூழ்நிலையிலும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் எந்தவகையிலும் பாதிப்படையக்கூடாது என்பதற்காகவே, கல்வி மேம்பாட்டுப் பேரவை, கல்விக்கழகம், தமிழ் வளர்ச்சிக்கழகம், மாணவர் அமைப்பு, மாணவர் அறிவியற்கழகம், மற்றும் செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை என்ற அமைப்புக்களை உருவாக்கி கல்வியை முன்னெடுப்பதற்கு வழிசமைத்துள்ளார்.

கல்வி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஆசிரியர்களைத் தெரிவு செய்து, அவர்களுக்குக் கொடுப்பனவு வழங்கி ஆசிரிய பற்றாக்குறையை ஈடுசெய்ததும் பாடசாலைப் புறமுயற்சிகளுக்கு ஆதரவு நல்கி, பரிசில்கள் வழங்கியமையும், தேர்வுகளுக்கு முக்கியத்துவம் தந்து மாணவர்களின் கல்வி அடைவு நிலையை உயர்த்த முயற்சித்ததும், வெகுமதிகள் வழங்கி ஊக்குவித்ததும் எல்லாமே கல்வியை வளம்படுத்த வேண்டுமென்ற சிரசனையின் பாற்பட்ட செயற்பாடுகள் என்பதை யாவரும் அறிவர்.

### இரு கருத்துக்கள் இல்லை

எனவே கல்வியைப் பற்றிய இருவேறு கருத்துக்கள் புலிகள் அமைப்பிற்கு இல்லை. 1990 ஆம் ஆண்டில் இருந்து அமைப்புரீதியாக எடுக்கப்பட்ட கல்வி நடவடிக்கைகள் எமது மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வந்துள்ளதென்பதை யாரும் இலகுவாக மறந்து விடவும் முடியாது. இன்றுள்ள இடம் பெயர்ந்த நிலையிலும் கூட வலிகாமத்திலிருந்த கல்விக் கோட்டங்களின் செயற்பாடுகளை மீள இங்கு ஆரம்பிப்பதற்கு வசதியாக பல செயற்பாடுகளை நாம் எடுத்துள்ளமையை சம்பந்தப்பட்டவர்கள் அறிவர்.

வலிகாமத்தில் ஆங்காங்கே ஏற்பட்ட இராணுவ நடவக்கையின் போது குறிப்பிட்ட வீதமான மாணவர்கள் சற்க முடியாத நிலை ஏற்பட்டது. இறுதியாகச் ''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை கல்விச் செயற்பாடுகள் அனைத்தையுமே இடைநிறுத்திவைத்துள்ளது. இன்றுள்ள நிலையில் வழமையான செயற்பாடுகளை முழுமையாக நாம் எதிர்பார்க்க முடியாது புறநடைகள் இருக்கத்தான் செய்யும்.

### இடர்ப்பாடுகள் பல

பாடசாலைகளில் புகலிடம் பெற்றுள்ள இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதில் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. எமக்குள்ள வளம் போதுமானதாக இல்லை. அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை நாம் பெறவேண்டும். இவற்றுக்கு முட்டுக்கட்டையாக இருப்பவற்றை இனங்கண்டு ஏற்ற வகையில் முழுமையாக மீளக் குடியமர்த்தல் செய்தபின்புதான் முழுமையாகப் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியும்.

குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் பாடசாலைகளைத் திறப்பதென்பது மக்களின் இடம் பெயர்வை மீள ஏற்படுத்தும். எனவே முழுமையாக எல்லா இடத்திலும் பாடசாலைகளை திறப்பதே அலைச்சலையும், கரைச்சலையும் தீர்க்கும். இந்த விடயங்களை ஆழமாக மனதில் இருத்திச் சிந்தித்து, விளங்கிக் கொண்டு மற்றவர்களுக்கும் இந்தச் சிந்தனையை எடுத்துச் சொல்ல வேண்டும். இதுவே தற்போதைக்குப் பொருத்தமானதும், விரும்பத்தக்கதுமான செயலாகும்.

பாடசாலைகளில் விரைவில் கற்றல், கற்பித்தல் நிகழ்ச்சிகளை ஆரம்பிப்பதற்குத் துறைசார்ந்த அனைவரின் பங்களிப்பையும் வேண்டி நிற்கிறோம் — என்றார்.

(அ)

# பாடசாலைகளிலே தற்காலிக கொட்டகைகள்

## இன்று அதிபர்கள் கூட்டம்

சாவகச்சேரி, பெப்.14

பாடசாலைகளில் தற்காலிகக் கொட்டகைகளை அமைப்பதற்கு நிதி வழங்குவது சம்பந்தமான அதிபர்களுக்கான அவசரக் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிகு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

பின்வரும் பாடசாலைகளின் அதிபர்கள் — உப அதிபர்களை தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு யாழ். கல்வி வலயம் - 1, கல்வி வலயம் - 2 ஆகியவற்றின் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

பாடசாலைகள் வருமாறு:-

இராமநாதன் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயம், மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயம், அருணோதயாக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை, தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தி, இணுவில் இந்துக் கல்லூரி, சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயம், சண்டிலிப்பாய் மகா வித்தியாலயம்.

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம், தெல்லிப்பளை வீமன்காமம் மகா வித்தியாலயம், சித்தன்கேணி கணேசமாவித்தியாலயம், செ, சாள்ஸ் மகா வித்தியாலயன் கோப்பாய் கந்தவேள் வித்தியாலயம், அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், அச்சுவேலி வடக்கு றோ. க. த. க பாடசாலை, கோப்பாய் நாவலர் வித்தியாலயம், கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம், வட்டு. கார்த்திகேயா வித்தியாலயம், வட்டு. திருஞானசம்பந்தர் வித்தியாலயம்.

பாஷையூர் புனித அன்ரனீஸ், கொழும்புத்துறை, துரையப்பா வித்தியாலயம், சண்டிலிப்பாய் வடக்கு அ.த.க. பாடசாலை, பெரியவிளான் றோ.க.த,க. பாடசாலை, இளவாலை றோ.க.த.க. பாடசாலை, மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் சில்லாலை றோ. க. த. க. பாடசாலை, சுழிபுரம் கிழக்கு அ. மி. த. க. பாடசாலை, சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம், இணுவில் இந்துக் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, உடுவில் அ.மி,த.க. பாடசாலை, மயிலிட்டி கலைமகள், [illegible]லாகம் மகா வித்தியாலய[illegible]

(இ)

# வவுனிக்குளத்தில் 8 பேரை விசர் நாய் கடித்தது!

## மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதி

வடமராட்சி, பெப்

ஒரே வீட்டில் வசித்து வந்த இரு குடும்பங்களை சேர்ந்த எட்டுப் பேர் விசர் நாய் ஒன்றினால் கடியு மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதி பட்டுள்ளனர்.

வவுனிக்குளத்தில் ஒட்டறுக்குளம் என்ற இடத்தி சம்பவம் இடம் பெற்றது.

ஆறுமுகம் கந்தசாமி (வயது55), அவரது மனைமணி (வயது47), பிள்ளைகளான தயாபரன் (வய இந்திரநேசன் (வயது12), பெறாமகளான ஸ்ரீதரன் (வயது36), மற்றொரு குடும்பத்தைச் சேர்ந்த நடமாலதி (வயது36) பிள்ளைகளான சுபத்திரா (வய பிரகாஸ் (வயது8) ஆகியோரே வைத்தியசாலையில் மதிக்கப்பட்டவர்களாவர்.

திங்கள் காலை இவர்களை விசர் நாய் கடி இவர்கள் உடனடியாக மல்லாவி அரசினர் வைசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அங்கிருந் நொச்சி அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட

இந்த இரு வைத்தியசாலைகளிலும் விசர்நா தடுப்பூசி மருந்து (ஏ. ஆர். வி ) இல்லாததால் த மருந்தைப் பெறும் பொருட்டு நேற்றுக் காலை மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர்.

வன்னிப் பகுதி வைத்தியசாலைகளில் விசர் நாய்க் கடி தடுப்பூசி மருந்து இன்மையால் விசர் நாய்க் கடிக்குள்ளாவோர் பெருந்தொகைப் பணம் செலவழித்து மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு வரவேண்டியுள்ளது — என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-173)

# போலிவைத்தியர்கள் குறித்து எச்சரிக்கை!

சாவகச்சேரி. பெப். 14

போலி வைத்தியர்கள் குறித்து தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவு எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களிலும், குடியிருப்புகளிலும் மட்டுப்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளுடன் வாழ்க்கை நடத்தும் தற்போதைய சூழ்நிலையை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு சில சுயநலமிகள் பணம் பறிக்கும் நோக்குடன் போலி வைத்தியர்களாக தொழிற்படுகிறார்கள். மருத்துவ அறிவு [illegible] மற்ற இவர்கள், நோயால் அவதியுறும் மக்களுக்கு சிகிச்சை செய்கிறார்கள். இது நோய் அதிகரிக்கவே வழி ஏற்படுத்தும். அத்துடன் இவர்களால் கொடுக்கப்பட்ட ஆபத்தான மருந்துகளினால் நோயாளிகளின் நிலைமை மோசமாகிய சம்பவங்களும் எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

எனவே இது தொடர்பாக விழிப்புடன் இருக்கும்படியும் —

இத்தகைய போலி வைத்தியர்கள் பற்றிய விவரங்களை எமக்கு 'தெரியப்படுத்தும்படியும் — பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் போலி வைத்தியர்கள் மீது தமிழீழ சுகாதார சேவையினர் கடுமையான நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்பதனையும் தெரியப்படுத்துகிறோம். —

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## ஜனவரி மாத சம்பளம்

சாவகச்சேரி, பெப் 14

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்களின் ஜனவரி மாதச் சம்பளம் சரசாலை தெற்கில் வழமையான இடத்தில் வைத்து வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரியில் இயங்கிய எமது நிறுவனம் தற்போது

**வினோ நகைப் பூங்கா**

235, கண்டி வீதி, சாவகச்சேரி.

(சபீதா உணவகத்திற்கு முன்பாக)

இயங்குகிறது என்பதை

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் மீண்டும் அறியத்தருகிறோம்.

முக்கிய குறிப்பு:

யாழ்ப்பாணம் பவளகேசரி நகை மாடத்தின் வாடிக்கையாளர்களை வினோ நகைப் பூங்கா ஆகிய எமது நிறுவனத்தில் தொடர்பு கொள்ளும்படி அதன் உரிமையாளர் பவளகேசரி கேட்டுக்கொள்கிறார்.

வினோ நகைப் பூங்கா

235, கண்டி வீதி,
சாவகச்சேரி. (40655)


## அரசையும் புலிகளையும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேயில் நடைபெற உள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அரசாங்கத் தரப்பில், ஜனாதிபதி சந்திரிகாவுடன் நெருங்கிய தொடர்புடைய சில பிரதிநிதிகள் கலந்து கொள்வர் என்றும் —

தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் அவர்களின் வெளிநாட்டு ஆலோசகர்களில் உயர்மட்டப் பிரதிநிதி ஒருவர் கலந்து கொள்வார் (இவர் அமெரிக்காவில் தங்கியுள்ளார்) என்றும் —

உத்தேச கலந்துரையாடலுக்குத் தலைமை வகிக்க உள்ள திரு. ஹோர்பிச் தெரிவித்தார்.

நோர்வே நாட்டைச் சேர்ந்த சி. எம். ஐ. என்ற ஆய்வு நிறுவனம் இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நோர்வேயின் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவரும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர் என்று ஏஜன்சி செய்திகள் தெரிவித்தன.

இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினைக்கு போரினால் என்றுமே தீர்வு காண முடியாது. ஆகையால் போரிடும் தரப்பினர் சமாதானத்தின் தேவையை உணர்ந்து பேச்சு நடத்த முடியும் — என்று சி.எம்.ஐ. அமைப்பின் அலுவலரான திரு. கிறீன் கென்டசார் தெரிவித்தார்.

### காவலரண்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று நிமிடம் வரை நடந்த இந்த அதிரடித் தாக்குதலில் அந்த காவலரண் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

இதில் படையினருக்கு ஏற்பட்டசேத விவரம் தெரிய வரவில்லை.

### 24 தமிழர்களின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

படையினரின் வெறியாட்டத்திலிருந்து தப்பியோடிய ஊர்மக்கள் சிலர் பின்னர் திரும்பி வந்து காயமடைந்தோரையும் இறந்த தமது உறவினர்களையும் டிராக்டர் ஒன்றில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## கருத்தரங்கு

### பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா சுவாமியின் தத்துவங்கள்

தலைவர்: திரு. வே. பொ. பாலசிங்கம் (யாழ். மாநகர ஆணையாளர்)

★ அவதார நோக்கம்
பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் [நந்தி]

★ கல்வித் தத்துவம்
திரு. நா. கந்தசாமி
(ஓய்வுபெற்ற அதிபர், யூனியன் கல்லூரி)

★ சேவை தத்துவம்
டாக்டர் சி. கருணானந்தன்

இடம்: நகரசபை நூலக மண்டபம், சாவகச்சேரி
காலம்: 19-02-1996 வெள்ளிக்கிழமை
நேரம்: மாலை 4.00 - 5.15 வரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஸ்ரீ சத்திய சாயி நிலையம்,
சாவகச்சேரி.

(40753)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை ஆறுமுகம்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், நுணாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை ஆறுமுகம் நேற்று (13-02-96) காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் தர்மராசா, சிதம்பரநாதன் (ஓமான்), Dr. கணேசராசா (ஓமான்), ஜெயபாலன் (ஈசன் களஞ்சியம், கிளிநொச்சி), திருமதி தவபாக்கியம் தில்லைநாதன், திருமதி தங்கராணி யோகேஸ்வரன், திருமதி புஸ்பராணி பேரின்பநாயகம், திருமதி வசந்தா சண்முகராசா [ஆசிரியை, வட்டு. திருஞானசம்பந்தா வித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செ. தில்லைநாதன் (கே. பி. ஆர். கிறைன்டிங் மில், நுணாவில் கிழக்கு), பொ. யோகேஸ்வரன் (B. M. C. வவுனியா), மா. பேரின்பநாயகம் (உதயன் பணிமனை), ந. சண்முகராசா, திருமதி விஜயலட்சுமி தர்மராசா (ஆசிரியை, டிறிபேக் கல்லூரி), திருமதி வதனி சிதம்பரநாதன், திருமதி வாசுகி கணேசராசா (ஓமான்), திருமதி றஜனி ஜெயபாலன் (ஆசிரியை, சென்திரேசா மகளிர் கல்லூரி, கிளிநொச்சி) ஆகியோரின் மாமனாரும், பாஸ்கரன், ரமா, வித்தியா, சுகந்தினி, அரவிந்தன், முகுந்தன், கோபிகா, சிந்துஜன், ஜலனி, சயான், விஜித், அஜித், சாரங்கன், கபிலராஜ், லஷ்மிகாந்தன், சுமித்திரா, உமாகாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (புதன்கிழமை) பிற்பகல் 3 மணியளவில் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ஆ. ஜெயபாலன் [மகன்]

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி. (40754)

### திருமதி வீரவாகு சோதிப்பிள்ளை

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், ஆசைப்பிள்ளை ஏத்தம் ஒட்டவெளியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோதிப்பிள்ளை நேற்று (13-2-96) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற வீரவாகுவின் அன்பு மனைவியும், கோபாலசுந்தரம், சிவஞானசுந்தரம், காலஞ்சென்ற தவயோகசுந்தரம், மோகனசுந்தரம், மோகனசுந்தரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14-2-96) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் தற்காலிக இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோபாலசுந்தரம் (மகன்)

தற்போதைய முகவரி:
கண்டி வீதி,
ஆசைப்பிள்ளை ஏத்தம்,
(செல்லையா - தம்பையா வளவு)
ஒட்டவெளி,
மிருசுவில். (40748)

### மரண அறிவித்தல்

### சுவாமிநாதர் வேலுப்பிள்ளை

நீர்வேலி மத்தியைச் சேர்ந்த சுவாமிநாதர் வேலுப்பிள்ளை நேற்று (13-02-96) மிருசுவில் தெற்கு, சமாதி மடத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அருமைக் கணவரும், சரஸ்வதி, விநாயகமூர்த்தி (கனடா), மகாலட்சுமி, சாந்தா, சகுந்தலா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மகேந்திரன், செல்வராணி (கனடா), அரசகேசரி, காலஞ்சென்றவர்களான கிருபானந்தராசா, பாஸ்கரன் ஆகியோரின் மாமனாரும், இரஞ்சினி, இரவீந்திரன் (ஹொலண்ட்), சிவாஜினி (அத்தியார் இந்துக் கல்லூரி மாணவி), சர்மிளா (கனடா), துஷ்யந்தன், துஷிராசா, பிரசாலினி ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 13-02-96 பிற்பகல் 5.00 மணிக்கு உசன் ஈச்சங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐயாக்குட்டி-தனபாலசிங்கம் (பேரன்)
வலி கிழக்கு பிரதேச சபை
'சமாதி மடம்'
மிருசுவில் தெற்கு. (40750)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் தெய்வநாயகம்பிள்ளை

காரைநகர் களவிலுப்பிட்டியைச் [மணற்காட்டு அம்மன் கோவிலடியை] சேர்ந்த பொன்னம்பலம் தெய்வநாயகம்பிள்ளை நுவரெலியாவில் 12-02-1996 இல் காலமாகிவிட்டார். இவர் தவமணியின் அன்புக்கணவரும், பொன்னம்பலம் [நுவரெலியா], சண்முகரத்தினம், நகுலேஸ்வரன் [நுவரெலியா], சரஸ்வதி, நாகேஸ்வரி, மீனாம்பிகை [நுவரெலியா] ஆகியோரின் பாசமிகு தந்தையும், குகபரனின் அன்பு மாமனாரும், தரிசிகா, கஜானன், தருசன் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
தெ. சண்முகரத்தினம் (மகன்)

தற்போதைய முகவரி;
தெ. சண்முகரத்தினம்,
C/o. அருளம்பலம்,
இல; 08, D7, ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி. [40743]

### திருமதி பொன்னம்பலம் இராசம்மா (ராசாத்தி)

ஐயா கடையடி, சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த திருமதி இராசம்மா பொன்னம்பலம் லண்டனில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா-பொன்னம்மா தம்பதிகளின் மகளும், யாழ். மாநகரசபை, சாவகச்சேரி நகரசபை முன்னாள் உத்தியோகஸ்தர் திரு. S. பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், சுதர்மி (U. K.), சுஜீவன் (U. K.) ஆகியோரின் தாயாரும், சுந்தரலிங்கம், சரவணமுத்து, தவமணிதேவி, தியாகராசா, பூமணிதேவி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

பொ. தியாகராசா, (சகோதரன்)
(40742) (PARANTHAN CHEMICALS)


வளமான வருங்காலத்திற்கு வழிகாட்டும்

## தேசிய சேமிப்பு வங்கி

சுன்னாகம் இளை

இன்று (14-02-1996) புதன்கிழமையில் இருந்து
பருத்தித்துறை வீரவாகு கட்டடத்தின் 165/21 இலக்கத்தில் இயங்குகிறது.

வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(63104) அதிகரித்த புதிய வட்டி வீதங்கள்: நிலையான வைப்பு — வருட வட்டி—16%, மாத வட்டி — 14.4%, சேமிப்புக்கு — 12%


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிக பணிமனையில் 14 - 02 - 96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org